©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 9.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 292A] சென்னை, செவ்வாய் கிழமை, ஆகஸ்ட் 30, 2011
ஆவணி 13, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

#### பொருளடக்கம்

| சட்ட முன் வடிவுகள்: | பக்கம் |
|---|---|
| எண் 16/2011 தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 2–18 |
| எண் 17/2011 தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 19–21 |
| எண் 18/2011 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. | 22–23 |

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2011**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**பகுதி – I.**

**முன்னுரையாக.**

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

28–ஆம் மற்றும் 29–ஆம் பிரிவுகளுக்கு பதிலாக அமைக்கப்–படுதல்.

தமிழ்நாடு சட்டம் IV/1919.

**2.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 28 மற்றும் 29–ஆம் பிரிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"**28. மேயருக்கான தேர்தல்.–** (1) (a). வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் கோட்டங்களுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(*b*) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை**: மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை**: அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, கோட்டங்களின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் வழக்கமான காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, (1)–ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

(6) மேயர், மன்றத்தின் பதவி வழி உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

29. **துணை மேயருக்கான தேர்தல்.–** (1) வகுத்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் மன்ற உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து துணை மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவின்படி நடத்தப்பட்ட தேர்தலொன்றில் துணை மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப் படவில்லையானால், துணை மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்.

(3) துணை மேயர், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அதற்கிடையே அவர், மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப் போகாத வரை அவ்வாறு துணை மேயராகத் தொடர்தல் வேண்டும்.

(4) துணை மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைகளின்படி நடத்தப்பட்ட புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படுதல்வேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் துணைமேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.''.

44–AB எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 44–AB எனும் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் "மேயர் அல்லது" எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், "மேயர் ஒருவர் அல்லது " எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (2)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (3)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

44–AC எனும் பிரிவிற்கான திருத்தம்.

4. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 44–AC எனும் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (12)–ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது அந்த'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (14)–ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

44–AD எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

5. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 44–AC எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“**44–AD. மேயரை நீக்குதல்–** (1) மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில், **ஐந்தில் மூன்று பங்கு** என்ற அளவில் அமைய வேண்டிய மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து அத்தகைய உறுப்பினர்களில் எவரேனும் இருவரால் ஆணையரிடம் முன்னிடப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலம், மேயரானவர் இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையுமோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையுமோ வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறார் அல்லது அதற்குக் கீழ்ப்படியாதிருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரம் எதனையும் தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதாக அந்த மேயருக்கெதிராகத் தீர்மானமொன்றைச் செய்வதற்கான தமது உட்கருத்தினை, மேயருக்கு நகலொன்றை அனுப்பியும், வெளிப்படுத்தலாம். ஆணையரானவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையர் குறிக்கக்கூடிய தேதி ஒன்றில், மன்றத்தின் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் மற்றும் மன்றத்தின் கருத்துகளைப் பதிவு செய்வதற்காகவும் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுதல் வேண்டும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால், அத்தீர்மானமானது, மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; மற்றும் மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால் அது கைவிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கூட்டத்திற்கான அறிவிப்பின் நகல் ஒன்று மேயருக்கும் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வழங்கும்படி ஆணையர் ஆவன செய்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு ஆணையர் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அக்கூட்டத்திற்குப் பிறநபர் எவரும் தலைமை வகித்தலாகாது. கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்பு அரை மணி நேரத்திற்குள்ளாக ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு வரவில்லையானால் அக்கூட்டமானது, (4)–ஆம் உட்பிரிவின்படி ஆணையரால் மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் குறிக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டிய தேதி ஒன்றுக்கு ஒத்தி வைக்கப்படுவதாதல் வேண்டும்.

(4) ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலாதிருப்பாராயின், அவர் எழுத்துருவில் தம் காரணங்களைப் பதிவு செய்தபின்பு, அவர் குறிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிக்கு அக்கூட்டத்தினை ஒத்திவைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது (1)–ஆம் உட்பிரிவின்படி கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தியதாக இருத்தல் கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காகக் குறிக்கப்படும் தேதி குறித்து மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் பதினைந்து நாட்களுக்கு குறையாத கால அளவிலான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) (3) மற்றும் (4)–ஆம் உட்பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின்படி மேயரை நீக்குவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காகக் கூட்டப்படும் ஒரு கூட்டமானது காரணம் எதற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(6) இந்தப்பிரிவின்படி கூட்டப்படும் கூட்டம் தொடங்கியவுடன், ஆணையர், எந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்வதற்காக அது கூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அறிவிப்பை மன்றத்திற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும்.

(7) ஆணையர் அறிவிப்பின் தகுதிப்பாடுகளைக் குறித்து பேசுவதோ, கூட்டத்தில் வாக்களிக்க உரிமைத்தகுதி பெறுவதோ கூடாது.

(8) கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் மன்றத்தின் கருத்துக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் கூட்டம் முடிவடைந்ததும் உடனடியாக நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஆணையரால் மாநில அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(9) மாநில அரசானது இதன் பொருட்டு மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பு, எழுத்துருவிலான அறிவிப்பு மூலம், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்குள்ளாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அவரது செயல்பாடுகள் அல்லது விடுபாடுகள் தொடர்பான அவரது விளக்கவுரையினை அளிக்குமாறு மேயரைக் கேட்டுக்கொள்ளலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரையானது பெறப்பட்டால், மற்றும் அந்த விளக்கவுரையானது நிறைவாக உள்ளது என மாநில அரசு கருதுமாயின், அவர்கள் அந்த அறிவிப்பு தொடர்பான மேல் நடவடிக்கையை விட்டுவிடலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரை பெறப்படவில்லையெனில் அல்லது அத்தகைய தேதிக்குள் பெறப்பட்ட விளக்கவுரையானது நிறைவளிப்பதாக இல்லையெனில் மாநில அரசானது, மேயரைப் பதவி நீக்கம் செய்யும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். மேயரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் இறுதியானதாதல் வேண்டும். மேயரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(10) (9)–ஆம் உட்பிரிவின்படி மேயர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்குத் தம் பொருட்டு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்ற நபர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய முறையில் மாநகராட்சிக்கான அடுத்த வழக்கமான தேர்தல்களுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் அந்தத் தேதி வரையில் அல்லது (9)–ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவுறும் வரையில் மேயர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.''.

6. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின், 59–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில் (c) எனும் கூறில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

## பகுதி III.

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

7. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 29 மற்றும் 30–ஆம் பிரிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 29–ஆம் மற்றும் 30–ஆம் பிரிவுகளுக்கு பதிலாக அமைக்கப்படுதல்.

''29. **மேயருக்கான தேர்தல்.–** (1) (a). வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் சிற்றொகுதிகளுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும்;

(b) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, சிற்றொகுதிகளின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் வழக்கமான காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, (1)–ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

(6) மேயர், மன்றத்தின் **பதவி வழி** உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

30. **துணை மேயருக்கான தேர்தல்.**–(1) வகுத்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் மன்ற உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து துணை மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி நடத்தப்பட்ட தேர்தலொன்றில் துணை மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், துணை மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்.

(3) துணை மேயர், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அதற்கிடையே அவர், மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப் போகாத வரை அவ்வாறு துணை மேயராகத் தொடர்தல் வேண்டும்.

(4) துணை மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைகளின்படி நடத்தப்பட்ட புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படுதல்வேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் துணைமேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.''.

48–AA எனும் பிரிவிற்கான திருத்தம்.

8. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–AA எனும் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (2)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (3)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

9. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–AB எனும் பிரிவில்,– 48–AB எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3). (12)–ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4). (13)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது அந்த'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5). (14)–ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

10. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–AB எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 48–AC எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

''48–AC. **மேயரை நீக்குதல்.**– (1) மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில், **ஐந்தில் மூன்று பங்கு** என்ற அளவில் அமைய வேண்டிய மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து அத்தகைய உறுப்பினர்களில் எவரேனும் இருவரால் ஆணையரிடம் முன்னிடப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலம், மேயரானவர் இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையுமோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையுமோ வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறார் அல்லது அதற்குக் கீழ்ப்படியாதிருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரம் எதனையும் தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதாக அந்த மேயருக்கெதிராகத் தீர்மானமொன்றைச் செய்வதற்கான தமது உட்கருத்தினை, மேயருக்கு நகலொன்றை அனுப்பியும், வெளிப்படுத்தலாம். ஆணையரானவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையர் குறிக்கக்கூடிய தேதி ஒன்றில், மன்றத்தின் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் மற்றும் மன்றத்தின் கருத்துகளைப் பதிவு செய்வதற்காகவும் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுதல் வேண்டும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால், அத்தீர்மானமானது, மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; மற்றும் மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால் அது கைவிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கூட்டத்திற்கான அறிவிப்பின் நகல் ஒன்று மேயருக்கும் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வழங்கும்படி ஆணையர் ஆவன செய்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு ஆணையர் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அக்கூட்டத்திற்குப் பிறநபர் எவரும் தலைமை வகித்தலாகாது. கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்பு அரை மணி நேரத்திற்குள்ளாக ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு வரவில்லையானால் அக்கூட்டமானது, (4)–ஆம் உட்பிரிவின்படி ஆணையரால் மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் குறிக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டிய தேதி ஒன்றுக்கு ஒத்தி வைக்கப்படுவதாதல் வேண்டும்.

(4) ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலாதிருப்பாராயின், அவர் எழுத்துருவில் தம் காரணங்களைப் பதிவு செய்தபின்பு, அவர் குறிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிக்கு அக்கூட்டத்தினை ஒத்திவைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது (1)–ஆம் உட்பிரிவின்படி கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தியதாக இருத்தல் கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காகக் குறிக்கப்படும் தேதி குறித்து மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் பதினைந்து நாட்களுக்கு குறையாத கால அளவிலான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5). (3) மற்றும் (4)–ஆம் உட்பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின்படி மேயரை நீக்குவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக கூட்டப்படும் ஒரு கூட்டமானது காரணம் எதற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(6) இந்தப்பிரிவின்படி கூட்டப்படும் கூட்டம் தொடங்கியவுடன், ஆணையர், எந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்வதற்காக அது கூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அறிவிப்பை மன்றத்திற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும்.

(7) ஆணையர் அறிவிப்பின் தகுதிப்பாடுகளைக் குறித்து பேசுவதோ, கூட்டத்தில் வாக்களிக்க உரிமைத்தகுதி பெறுவதோ கூடாது.

(8) கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் மன்றத்தின் கருத்துக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் கூட்டம் முடிவடைந்ததும் உடனடியாக நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஆணையரால் மாநில அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(9) மாநில அரசானது இதன் பொருட்டு மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பு, எழுத்துருவிலான அறிவிப்பு மூலம், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்குள்ளாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அவரது செயல்பாடுகள் அல்லது விடுபாடுகள் தொடர்பான அவரது விளக்கவுரையினை அளிக்குமாறு மேயரைக் கேட்டுக்கொள்ளலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரையானது பெறப்பட்டால், மற்றும் அந்த விளக்கவுரையானது நிறைவாக உள்ளது என மாநில அரசு கருதுமாயின், அவர்கள் அந்த அறிவிப்பு தொடர்பான மேல் நடவடிக்கையை விட்டுவிடலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரை பெறப்படவில்லையெனில் அல்லது அத்தகைய தேதிக்குள் பெறப்பட்ட விளக்கவுரையானது நிறைவளிப்பதாக இல்லையெனில் மாநில அரசானது, மேயரைப் பதவி நீக்கம் செய்யும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். மேயரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் இறுதியானதாதல் வேண்டும். மேயரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(10). (9)–ஆம் உட்பிரிவின்படி மேயர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்குத் தம் பொருட்டு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்ற நபர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய முறையில் மாநகராட்சிக்கான அடுத்த வழக்கமான தேர்தல்களுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் அந்தத் தேதி வரையில் அல்லது (9)–ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவுறும் வரையில் மேயர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.''.

66–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின், 66–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி IV.

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

29–ஆம் மற்றும் 30–ஆம் பிரிவுகளுக்கு பதிலாக அமைக்கப்படுதல்.

12. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 29 மற்றும் 30–ஆம் பிரிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 25/1981.

''29. **மேயருக்கான தேர்தல்.**– (1) (a). வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் கோட்டங்களுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும்;

(b) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, கோட்டங்களின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் வழக்கமான காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, (1)–ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

(6) மேயர், மன்றத்தின் பதவி வழி உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

30. **துணை மேயருக்கான தேர்தல்.–** (1) வகுத்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் மன்ற உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து துணை மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவின்படி நடத்தப்பட்ட தேர்தலொன்றில் துணை மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப் படவில்லையானால், துணை மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்.

(3) துணை மேயர், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அதற்கிடையே அவர், மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப் போகாத வரை அவ்வாறு துணை மேயராகத் தொடர்தல் வேண்டும்.

(4) துணை மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைகளின்படி நடத்தப்பட்ட புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படுதல்வேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் துணைமேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.''.

13. 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 50–B எனும் பிரிவில்,– 50–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3). (2)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4). (3)–ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50–C எனும் பிரிவிற்கான திருத்தம்.

**14. 1981–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **50–C** எனும் பிரிவில்,–

**(1)** ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(2). (1)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(3). (12)–**ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(4). (13)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது அந்த'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(5). (14)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50–D எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**15. 1981–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **50–C** எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''50–D. **மேயரை நீக்குதல்.– (1)** மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில், **ஐந்தில் மூன்று பங்கு** என்ற அளவில் அமைய வேண்டிய மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து அத்தகைய உறுப்பினர்களில் எவரேனும் இருவரால் ஆணையரிடம் முன்னிடப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலம், மேயரானவர் இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையுமோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையுமோ வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறார் அல்லது அதற்குக் கீழ்ப்படியாதிருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரம் எதனையும் தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதாக அந்த மேயருக்கெதிராகத் தீர்மானமொன்றைச் செய்வதற்கான தமது உட்கருத்தினை, மேயருக்கு நகலொன்றை அனுப்பியும், வெளிப்படுத்தலாம். ஆணையரானவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையர் குறிக்கக்கூடிய தேதி ஒன்றில், மன்றத்தின் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் மற்றும் மன்றத்தின் கருத்துகளைப் பதிவு செய்வதற்காகவும் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுதல் வேண்டும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால், அத்தீர்மானமானது, மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; மற்றும் மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால் அது கைவிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**(2)** கூட்டத்திற்கான அறிவிப்பின் நகல் ஒன்று மேயருக்கும் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வழங்கும்படி ஆணையர் ஆவன செய்தல் வேண்டும்.

**(3)** இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு ஆணையர் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அக்கூட்டத்திற்குப் பிறநபர் எவரும் தலைமை வகித்தலாகாது. கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்பு அரை மணி நேரத்திற்குள்ளாக ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு வரவில்லையானால் அக்கூட்டமானது, **(4)–**ஆம் உட்பிரிவின்படி ஆணையரால் மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் குறிக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டிய தேதி ஒன்றுக்கு ஒத்தி வைக்கப்படுவதாதல் வேண்டும்.

**(4)** ஆணையர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலாதிருப்பாராயின், அவர் எழுத்துருவில் தம் காரணங்களைப் பதிவு செய்தபின்பு, அவர் குறிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிக்கு அக்கூட்டத்தினை ஒத்திவைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது **(1)–**ஆம் உட்பிரிவின்படி கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தியதாக இருத்தல் கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காகக் குறிக்கப்படும் தேதி குறித்து மேயருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் பதினைந்து நாட்களுக்கு குறையாத கால அளவிலான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5). (3) மற்றும் (4)—ஆம் உட்பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின்படி மேயரை நீக்குவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காகக் கூட்டப்படும் ஒரு கூட்டமானது காரணம் எதற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(6) இந்தப்பிரிவின்படி கூட்டப்படும் கூட்டம் தொடங்கியவுடன், ஆணையர், எந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்வதற்காக அது கூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அறிவிப்பை மன்றத்திற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும்.

(7) ஆணையர் அறிவிப்பின் தகுதிப்பாடுகளைக் குறித்து பேசுவதோ, கூட்டத்தில் வாக்களிக்க உரிமைத்தகுதி பெறுவதோ கூடாது.

(8) கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் மன்றத்தின் கருத்துக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் கூட்டம் முடிவடைந்ததும் உடனடியாக நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஆணையரால் மாநில அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(9) மாநில அரசானது இதன் பொருட்டு மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பு, எழுத்துருவிலான அறிவிப்பு மூலம், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்குள்ளாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அவரது செயல்பாடுகள் அல்லது விடுபாடுகள் தொடர்பான அவரது விளக்கவுரையினை அளிக்குமாறு மேயரைக் கேட்டுக்கொள்ளலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரையானது பெறப்பட்டால், மற்றும் அந்த விளக்கவுரையானது நிறைவாக உள்ளது என மாநில அரசு கருதுமாயின், அவர்கள் அந்த அறிவிப்பு தொடர்பான மேல் நடவடிக்கையை விட்டுவிடலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரை பெறப்படவில்லையெனில் அல்லது அத்தகைய தேதிக்குள் பெறப்பட்ட விளக்கவுரையானது நிறைவளிப்பதாக இல்லையெனில் மாநில அரசானது, மேயரைப் பதவி நீக்கம் செய்யும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். மேயரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் இறுதியானதாதல் வேண்டும். மேயரை பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(10). (9)—ஆம் உட்பிரிவின்படி மேயர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்குத் தம் பொருட்டு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்ற நபர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய முறையில் மாநகராட்சிக்கான அடுத்த வழக்கமான தேர்தல்களுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் அந்தத் தேதி வரையில் அல்லது (9)—ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவுறும் வரையில் மேயர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.''.

**16.** 1981—ஆம் ஆண்டுச் சட்டத்தின், 68—ஆம் பிரிவில், (2)—ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 68—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

## பகுதி—V.

## 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**17.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1920—ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், 3—F எனும் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், ''மூன்றாம் நிலை நகராட்சியொன்றின் உறுப்பினர்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பின்னர், ''(அதன் தலைமையாளரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 3—F எனும் பிரிவிற்கான திருத்தம்.

**18.** 1920—ஆம் ஆண்டுச் சட்டத்தின், 3—T எனும் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், ''பேரூராட்சியொன்றின் உறுப்பினர்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பின்னர், ''(அதன் தலைமையாளரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 3—T எனும் பிரிவிற்கான திருத்தம்.

**19.** 1920—ஆம் ஆண்டுச் சட்டத்தின், 7—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், ''மன்றத்தின் அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் என்னும் சொற்றொடருக்குப் பின்னர், ''(அதன் தலைமையாளரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 7—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**20.** 1920—ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7—ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 7—A எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**"7–A. தலைமையாளருக்கான தேர்தல்.–** வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் அந்த நகராட்சிக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தலைமையாளர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், தலைமையாளருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் தலைமையாளர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் தலைமையாளர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.".

8–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**21.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 8–ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (2)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4). (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–A) தலைமையாளரின் தேர்தலானது, நகராட்சிகளின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.'';

(5). (3)–ஆம் உட்பிரிவில், ''தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(6). (4)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர் பதவியில் உள்ள ஒரு தற்செயல் காலியிடம்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர் பதவியில் உள்ள ஒரு தற்செயல் காலியிடம்'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(7). (5)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''அந்த மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே, '' தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''அந்த தலைமையாளர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

9–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**22.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 9–ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (3)–ஆம் உட்பிரிவில், ''இந்தப்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''(1)–ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

23. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில்,– 12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (2)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2). (4)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(4) தலைமையாளரொருவர், பதவியை வகிப்பதிலிருந்து தகுதியற்றவராக ஆகியிருப்பதன் பேரில் அல்லது தாம் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பதன் பேரில் அல்லது தமது பதவிக்கால அளவு முடிவடைந்ததன் பேரில் அல்லது தாம் பிறவாறு தலைமையாளராக இருப்பது அற்றுப்போவதன் பேரில் அவர் தமது பதவியை விட்டு நீங்கியிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.''.

24. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 12–A எனும் பிரிவில் ஓரத்தலைப்பு உள்பட இரண்டு இடங்களில் வரும் ''தலைமையாளர் அல்லது'', எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும். 12–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

25. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தில், 14–ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 14–ஆம் பிரிவிற்குப் பதிலாக அமைத்தல்.

''(14). **தலைமையாளர் மன்றத்தின் மற்றும் மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராயிருத்தல்.–** தலைமையாளர் தனது பதவியின் காரணமாக மன்றத்தின் மற்றும் மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராவார்.''.

26. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில்,– 30–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

27. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 40–ஆம் பிரிவில் ஓரத்தலைப்பு உள்பட ''தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர்'', என்னும் சொற்றொடரானது வருகிற இடங்களிலெல்லாம், அதற்குப் பதிலாக, ''துணைத் தலைமையாளர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 40–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

28. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 40–A எனும் பிரிவில்,– 40–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1). ஓரத்தலைப்பில், ''தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைமையாளர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைமையாளர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (12)–ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணைத் தலைமையாளர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4). (13)–ஆம் உட்பிரிவில், ''தலைமையாளர் அல்லது'', எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5). (14)–ஆம் உட்பிரிவில், ''தலைமையாளர் ஒருவர் அல்லது துணைத் தலைமையாளர் ஒருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைமையாளர் ஒருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

40–B எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**29.** **1920**–ஆம் ஆண்டுச் சட்டத்தின் **40–A** எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"40–B. தலைமையாளரை நீக்குதல்.–(1)** மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில், **ஐந்தில் மூன்று பங்கு** என்ற அளவில் அமைய வேண்டிய மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து, அத்தகைய உறுப்பினர்களில் எவரேனும் இருவரால், (இதன் பின்பு இப்பிரிவில் மண்டல இயக்குநர் என்று குறிப்பிடப்படுவதான) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடம் முன்னிடப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலம், தலைமையாளரானவர் இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையுமோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையுமோ வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறார் அல்லது அதற்குக் கீழ்ப்படியாதிருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரம் எதனையுமோ தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதாக அந்தத் தலைமையாளருக்கெதிராகத் தீர்மானமொன்றைச் செய்வதற்கான தமது உட்கருத்தினை, தலைமையாளருக்கு நகலொன்றை அனுப்பியும், வெளிப்படுத்தலாம். மண்டல இயக்குநரானவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், நகராட்சி அலுவலகத்தில் மண்டல இயக்குநர் குறிக்கக்கூடிய தேதி ஒன்றில், மன்றத்தின் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் மற்றும் மன்றத்தின் கருத்துகளைப் பதிவு செய்வதற்காகவும் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுதல் வேண்டும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால், அத்தீர்மானமானது, மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; மற்றும் மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால் அது கைவிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**(2)** கூட்டத்திற்கான அறிவிப்பின் நகல் ஒன்று தலைமையாளருக்கும் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வழங்கும்படி மண்டல இயக்குநர் ஆவன செய்தல் வேண்டும்.

**(3)** இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு மண்டல இயக்குநர் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அக்கூட்டத்திற்குப் பிறநபர் எவரும் தலைமை வகித்தலாகாது. கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்பு அரை மணி நேரத்திற்குள்ளாக மண்டல இயக்குநர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு வரவில்லையானால் அக்கூட்டமானது, **(4)**–ஆம் உட்பிரிவின்படி மண்டல இயக்குநரால் தலைமையாளருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் குறிக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டிய தேதி ஒன்றுக்கு ஒத்தி வைக்கப்படுவதாதல் வேண்டும்.

**(4)** மண்டல இயக்குநர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலாதிருப்பாராயின், அவர் எழுத்துருவில் தம் காரணங்களைப் பதிவு செய்தபின்பு, அவர் குறிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிக்கு அக்கூட்டத்தினை ஒத்திவைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது **(1)**–ஆம் உட்பிரிவின்படி கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தியதாக இருத்தல் கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காகக் குறிக்கப்படும் தேதி குறித்து தலைமையாளருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் பதினைந்து நாட்களுக்கு குறையாத கால அளவிலான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

**(5)** **(3)** மற்றும் **(4)**–ஆம் உட்பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின்படி தலைமையாளரை நீக்குவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக கூட்டப்படும் ஒரு கூட்டமானது காரணம் எதற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

**(6)** இந்தப்பிரிவின்படி கூட்டப்படும் கூட்டம் தொடங்கியவுடன், மண்டல இயக்குநர், எந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்வதற்காக அது கூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அறிவிப்பை மன்றத்திற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும்.

**(7)** மண்டல இயக்குநர் அறிவிப்பின் தகுதிப்பாடுகளைக் குறித்து பேசுவதோ, கூட்டத்தில் வாக்களிக்க உரிமைத்தகுதி பெறுவதோ கூடாது.

**(8)** கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் மன்றத்தின் கருத்துக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் கூட்டம் முடிவடைந்ததும் உடனடியாக நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் மண்டல இயக்குநரால், நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக, மாநில அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(9) மாநில அரசானது இதன் பொருட்டு மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பு, எழுத்துருவிலான அறிவிப்பு மூலம், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்குள்ளாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அவரது செயல்பாடுகள் அல்லது விடுபாடுகள் தொடர்பான அவரது விளக்கவுரையினை அளிக்குமாறு தலைமையாளரைக் கேட்டுக்கொள்ளலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரையானது பெறப்பட்டால், மற்றும் அந்த விளக்கவுரையானது நிறைவாக உள்ளது என மாநில அரசு கருதுமாயின், அவர்கள் அந்த அறிவிப்பு தொடர்பான மேல் நடவடிக்கையை விட்டுவிடலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரை பெறப்படவில்லையெனில் அல்லது அத்தகைய தேதிக்குள் பெறப்பட்ட விளக்கவுரையானது நிறைவளிப்பதாக இல்லையெனில் மாநில அரசானது, தலைமையாளரைப் பதவி நீக்கம் செய்யும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். தலைமையாளரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் இறுதியானதாதல் வேண்டும். தலைமையாளரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(10). (9)–ஆம் உட்பிரிவின்படி தலைமையாளர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்குத் தம் பொருட்டு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்ற நபர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய முறையில் நகராட்சி மன்றத்திற்கான அடுத்த வழக்கமான தேர்தல்களுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் அந்தத் தேதி வரையில் அல்லது (9)–ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவுறும் வரையில் தலைமையாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.''.

30. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 43–C எனும் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில்,– 43–C எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

31. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில்,– 48–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவராக'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (2)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவராக'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

32. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில்,– 49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (2)–ஆம் உட்பிரிவில்,–

(a) முகப்புப் பகுதியில், ''மன்ற உறுப்பினரொருவராக'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைமையாளரொருவராக அல்லது மன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(b). (e)–எனும் கூறில், இரு இடங்களில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என வரும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

33. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 50–ஆம் பிரிவில்,– 50–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). ஓரத் தலைப்பில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில்,–

(a) முகப்புப் பகுதியில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b). (f)–எனும் கூறில், ''பிற மன்ற உறுப்பினர் எவரின்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைமையாளரின் அல்லது பிற மன்ற உறுப்பினர் எவரின்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(c). (i)–எனும் கூறில்,–

(i) ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (4)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகிறதோ, அதற்குப் பதிலாக, முறையே ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

51–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

34. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 51–ஆம் பிரிவில்,–

(1). ஓரத் தலைப்பில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'', ''மன்ற உறுப்பினரெவரும்'' மற்றும் ''அத்தகைய மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'', ''அந்தத் தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரெவரும்'' மற்றும் ''அத்தகைய தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (3)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

368–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

35. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 368–ஆம் பிரிவில்,

(1). (2)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளரும் மன்ற உறுப்பினர்களும்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (5)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (6)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

தற்போது மாநகராட்சிகளின் மேயர்களும் மற்றும் நகராட்சிகளின் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களால் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெரும்பாலான மேயர்கள் அல்லது தலைவர்கள், மாநகராட்சி அல்லது நகராட்சிப் பரப்பிடங்கள் முழுவதையும் பொறுத்த அளவில் மேம்பாட்டில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, தாம் முறையே எந்த சிற்றொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரோ அந்தச் சிற்றொகுதியின் மேம்பாட்டிற்காக மட்டுமே தமது கவனத்தைச் செலுத்துகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, மாநகராட்சியின் மேயருக்கான மற்றும் நகராட்சியின் தலைவருக்கான தேர்தல் முறையை மறைமுகத் தேர்தல் முறையிலிருந்து நேரடித் தேர்தல் முறைக்கு மாற்றுவதென அரசு முடிவு செய்துள்ளது. அது, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் மேம்பட்ட நிர்வாகத்திற்கு எளிதாக வழி வகுக்கும்; மக்களுக்கு இன்னமும் திறம்பட்ட முறையிலும், விரைவாகவும் பொதுப்பணிகளை வழங்கும் விளைவை ஏற்படுத்தும். எனவே, அரசானது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**

*நகராட்சி நிர்வாகம் மற்றும்*

*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 2–ஆம் கூறினால் பதிலாக அமைக்கக் கருதப்படும் 1919 – ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 28, 29 ஆகிய பிரிவுகளும், 5–ஆம் கூறினால் அந்தச் சட்டத்தில் புகுத்தக் கருதப்படும் 44–AD எனும் புதிய பிரிவும்; இச்சட்டமுன்வடிவின் 7–ஆம் கூறினால் பதிலாக அமைக்கக் கருதப்படும் 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 29, 30 ஆகிய பிரிவுகளும், 10–ஆம் கூறினால் அந்தச் சட்டத்தில் புகுத்தக் கருதப்படும் 48– AC எனும் புதிய பிரிவும்; இச்சட்டமுன்வடிவின் 12–ஆம் கூறினால் பதிலாக அமைக்கக் கருதப்படும் 1981 – ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 29, 30 ஆகிய பிரிவுகளும், 15–ஆம் கூறினால் அந்தச் சட்டத்தில் புகுத்தக் கருதப்படும் 50–D எனும் புதிய பிரிவும்; 1920– ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் V/ 1920) 20, 29 ஆகிய கூறுகளால் முறையே புகுத்தக் கருதப்படும் 7–A, 40–B ஆகிய புதிய பிரிவுகளும் அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்யவோ அல்லது அறிவிக்கையைப் பிறப்பிக்கவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**பகுதி – I.**

**முன்னுரையாக.**

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 28/1994.

6–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் 6–ஆம் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**6–A. தேர்தல் தொடர்பான தனி வகைமுறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது 1981–ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கியதற்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய மன்றத்துக்கான முதல் தேர்தலுக்காக, மாநகரக் கோட்டங்களின் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்துத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை, 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதியன்று அவை இருந்தவாறு இருத்தல் வேண்டும்.".

**பகுதி–III.**

**1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 29/1994.

6–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**3.** 1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 6–ஆம் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**6–A.தேர்தல் தொடர்பான தனி வகைமுறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது 1981–ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கியதற்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய மன்றத்துக்கான முதல் தேர்தலுக்காக, மாநகரக் கோட்டங்களின் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்துத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை, 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதியன்று அவை இருந்தவாறு இருத்தல் வேண்டும்.".

## பகுதி–IV.

## 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

43–AAA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**4.** 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் **43–AA-** எனும் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் V / 1920.

“**43– AAA-. தேர்தல் தொடர்பான தனி வகைமுறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், புதுக்கோட்டை, கரூர், காஞ்சிபுரம், ஓசூர், நாமக்கல், விழுப்புரம், திருப்பத்துார், நாகர்கோவில் ஆகிய நகராட்சிகளின் நகராட்சி மன்றங்களைத் தவிர, 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கியதற்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய பிற நகராட்சி மன்றங்களுக்கான முதல் தேர்தலுக்காக, நகராட்சி மன்றத்தின் சிற்றொகுதிகளின் ஆட்சி நிலவரைப் பகுதி, சிற்றொகுதிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய சிற்றொகுதிகளிலிருந்துத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் அல்லது நேர்விற்கேற்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை, 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதியன்று அவை இருந்தவாறு இருத்தல் வேண்டும்.”.

**நோக்க–காரண விளக்கவுரை**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான அடுத்த வழக்கமான தேர்தலானது, 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24–ஆம் நாளுக்கு முன்னர், நடத்தப்படவேண்டியுள்ளது. 2001–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்த அதிகாரப்பூர்வமான இலக்கங்களைப் பொறுத்து சிற்றொகுதிகளின் மொத்த எண்ணிக்கையை நிர்ணயிக்கும் பணியும் அதனைத் தொடர்ந்து சிற்றொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணியும் மாநகராட்சிகளின் ஆணையர்களாலும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் நிர்வாக அலுவலர்களாலும் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இம்மாநிலத்திலுள்ள திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளைப் பொறுத்த அளவிலும் பெரும்பாலான நகராட்சிகளைப் பொறுத்த அளவிலும், அனைத்துப் பேரூராட்சிகளைப் பொறுத்த அளவிலும் சிற்றொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் பணியானது, இன்னும் முடிக்கப்படவேண்டிய நிலையில் உள்ளது. இவ்வாறிருக்க, 2011–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 25–ஆம் நாளுக்கு முன்னதாக, தற்போது இருக்கிற கால அளவிற்குள் எல்லைகளை நிர்ணயிக்கும் பணியைச் செய்து முடிக்க இயலாது. எனவே அரசானது, எல்லைகளை நிர்ணயிக்கும் பணி இன்னும் நிறைவு பெறாத நிலையில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த அளவில், தற்போது இருந்து வருகின்ற கோட்டங்கள் அல்லது சிற்றொகுதிகளின் ஆட்சிநிலவரைப்பகுதி, சிற்றொகுதிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை அல்லது அத்தகைய சிற்றொகுதிகள்/ கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, மேற்சொன்ன வழக்கமான தேர்தலை நடத்துவதெனவும் இது குறித்து, தொடர்புடைய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களைத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2011**

***1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால், பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரையில், ‘‘இருபது’’ என்னும் சொல்லுக்குப் பதிலாக, ‘‘பதினைந்து’’ எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**நோக்க — காரண விளக்கவுரை.**

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 7 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவின் முதல் வரம்புரைக்கு இணங்க, நகராட்சி மன்றம் ஒன்றிற்கான மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, மேற்சொன்ன 7 ஆம் பிரிவின் கீழ் அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டவாறு, இருபதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது. ஆனால் அண்மையில் நகராட்சிகளாக மறுவகைப்படுத்தப்பட்ட சில மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, இருபதுக்கும் குறைவாக உள்ளது. மக்கள் தொகை குறித்த துல்லியமான அதிகாரப்பூர்வ மக்கள் தொகை இலக்கங்கள் இல்லாத நிலையில், சிற்றொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கும் மற்றும் அச்சிற்றொகுதிகளுக்கு தேர்தலில் இடங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களின் போது நடைபெறவிருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வழக்கமான தேர்தல்களுக்கு முன்னர், மேற்சொன்ன வகைமுறையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நகராட்சிகளைப் பொறுத்து, மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைந்த பட்ச எண்ணிக்கை அளவுக்கு அதிகரிப்பது இயலாததாக இருப்பதால் மேற்சொன்ன, 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் குறித்துரைக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை அளவினை பதினைந்தாக நிர்ணயிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது, மேற்சொன்ன V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவை அந்நோக்கத்திற்குத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.